# அநுதின பரலோக மன்னா

# DAILY HEAVENLY MANNA

## விசுவாச வீட்டாருக்காக

"சகோதரரே, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது."
*(2 பேது. 1:5-8)*

மறுபதிப்பு : 2012

**சென்னை வேதமாணவர் சபை**
22, முதல் தெரு, ராஜீவ் நகர்,
காலடிப்பேட்டை, திருவொற்றியூர்,
சென்னை - 600 019.

DAILY HEAVENLY MANNA
*Tamil Version*

I Edition - 500 copies
II Edition (Revised) 2012 - 2000 copies

**NOT FOR SALE**

*Translated by :*
**BIBLE STUDENTS ASSOCIATION**
**Coimbatore.**

*Revised by :*
**CHENNAI BIBLE STUDENTS**
No. 22, First Street, Rajiv Nagar,
Kaladipet, Thiruvottriyur,
Chennai-600 019,
India.

# வெளியீட்டாளரின் முன்னுரை

"அநுதின பரலோக மன்னாவின்" முதல் பதிப்பு ஆங்கிலத்தில் பிப்ரவரி 1, 1905ல் வெளியிடப்பட்டது. முதல் பதிப்பில் 20,000 பிரதிகளும், 1907ல் இரண்டாவது பதிப்பில் 40,000 பிரதிகளும் வெளியிடப்பட்டன. 1918ல் பாக்கெட் பதிப்புகள் (Pocket Edition) வெளியிடப்பட்டன. அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. டாண் தேவமாணவர்கள் மற்றும் சிகாகோ வேதமாணவர்கள் இதை மறுபதிப்பு செய்து தொடர்ந்து வெளியிட்டு வந்தார்கள்.

இதை சில ஆண்டுகளுக்கு முன்பாக தமிழில் மொழி பெயர்த்து வேதமாணவர் சபை, கோவை கிளை சகோதரர்கள் வெளியிட்டார்கள். இந்த புத்தகம் இன்னும் தேவைப்படுவதால், இதை திருத்தி மறுபடியும் வெளியிடுகிறோம்.

"மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப் பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார். தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான்; அவர்களுக்கு ஆகாரத்தை பூரணமாய் அனுப்பினார்."(சங். 78:24-25)

"மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயி-ருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்." (மத். 4:4)

இந்த ஆவிக்குரிய மன்னா, ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய விசுவாச வீட்டாருக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறோம்.

-வெளியீட்டாளர்-

# ஆசிரியரின் முன்னுரை

## பிரயோஜனமான அநுதின காணிக்கை

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசம பாகங்களையெல்லாம் பண்ட சாலையில் கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல்கியா *3:10*

கிறிஸ்தவர்கள், சுய விருப்பதுடன் அன்றாட பரலோக உணவை பெற்றுக் கொள்ள வாஞ்சை இருந்தால், அவர்கள் தங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியை குறித்தோ, அன்றாட உலக தேவைகள் ஆசீர்வாதங்களை குறித்தோ, கவலைப்பட தேவை இல்லை. ஏனெனில், உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் என்ற வசனத்தை நினைவு கூறவேண்டும்." நீதி. *3: 6*

எங்களது முதல் பதிப்பான "மன்னா"வின் 20,000 பதிப்புகள், நாங்கள் எதிர்பார்த்ததை விட அதிக வெற்றியைத் தந்தது. மேலும் அநேக சகோதரர்களின் பாராட்டுதலையும் பெற்றுத்தந்தது. அநேகர் தங்களின் அன்றாட அதிகாலை உணவாக, இந்த பதிப்பை நினைத்து, இதை "பரலோக மன்னா" என்றும் அழைத்தனர். ஆம்! உண்மையாகவே, ஒரு சிறிய நேரத்தை, இந்த மன்னா வாசிப்பிற்கு கொடுப்பதன் மூலம், உறுதியான ஆசீர்வாத்தை பெறுவதில் எந்த சந்தேகமுமில்லை. நம்முடைய சிந்தை, பரிசுத்தமான எண்ணங்களை நோக்கி இருக்கும். "ஞானம் பரத்தி-ருந்து வருகிறது" என்ற வசனம் படிப்படியாக, நம்மில் வளர்ந்து நம்மை நல்ல கனிகளைத் தருபவர்களாகவும், இவ்வுலகத்திற்கு விழிப்புள்ளவர்களாகவும் மாற்றும் என்பதில் சந்தேகம் இல்லை. ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆர்வத்துடன் இதனை வாங்கி, அதனை தங்கள் காலை உணவு



அருந்தும் மேசையில் வைத்துக் கொள்கின்றனர். இந்த புத்தகம், சுயலாபத்திற்காக அல்லாமல், நன்மையான ஈவு என்ற நோக்கத்திலேயே வெளியிடப்படுகிறது. நாம், நம்முடைய சக நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம், இந்த புத்தகத்தை குறித்து விழிப்புணர்வையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தலாம். இதனை பெயர் கிறிஸ்தவர்களுக்கு அல்ல, உண்மை கிறிஸ்தவர்களிடம் மட்டுமே ஏற்படுத்த முடியும். அநேகர் இதனை பிறந்தநாள் பரிசாகவும், விடுமுறை நாள் பரிசாகவும், உபயோகிக்கின்றனர். இப்படிப்பட்ட விசேஷ ஊழியங்களை விருப்பத்துடன் மனமுவந்து செய்ய அனைவரையும் அழைக்கிறோம்.

இந்த புத்தகம், ஒரு வாழ்நாள் புத்தகமாக இருக்கிறது. இதை வருடந்தோறும் உபயோகப்படுத்தலாம். புனிதமான செய்திகள் ஒருபோதும் பழமை அடையாது. வார்த்தைக்கு வார்த்தை, போதனைக்குமேல் போதனையை தருவதாக இருக்கும்.

உங்கள் அன்பு சகோதரன் மற்றும் ஊழியன்,

**சார்லஸ் டி ரசல்.**

**அ அ**